**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

FWC

| தரம் :- 12 (2020) | அரசியல் விஞ்ஞானம் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ பகுதி I A பிரிவில் 25 பல்தேர்வு வினாக்களுக்கும் B பிரிவில் 15 குறு வினாக்களுக்கும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ 01 முதல் 10 வரையான வினாக்களுக்கும் சரியான கூற்றுக்களின் சேர்மானத்தினைத் தெரிவு செய்க.

1) அரசியல் விஞ்ஞானம் என்பது
   A. அரசறியியலின் பரவல் கி.பி நான்காம் நூற்றாண்டளவில் கிரேக்கத்தில் ஆரம்பமானது.
   B. இருபத்தைந்து நூற்றாண்டுகளாக கட்டியெழுப்பப்பட்டு அபிவிருத்தி அடைந்துள்ளது.
   C. அரசியலை கற்பித்தல், பயிற்றுவித்தல் ஆகியன அரசறிவியல் நிகழ்ச்சி நிரலின் நோக்கங்களாக காணப்படுகின்றது.
   D. பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்றோர் இக்கற்கையின் ஆரம்ப கர்த்தாக்களாவர்.
   E. இயங்குதன்மை பொருந்திய சமூக விஞ்ஞான கற்கை நெறிகளில் ஒன்றாக பரிணமிக்கின்றது.
   1. ABCD  2. ACDE  3. ABDE  4. ABCE  5.BCDE

2) அரசறிவியல் விஞ்ஞான கோட்பாடு என்பது,
   A. சமூகவியலாளரினால் 1930களில் விஞ்ஞானரீதியிலான பார்வை என்ற பின்புலத்தில் இருந்து தோற்றம் பெற்றதாகும்.
   B. மெய்ப்பிக்க கூடிய தரவுகள் மற்றும் சான்றுகளை கண்காணித்தலும் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தி உருவாக்கப்படும் சட்டத்தொகுதி ஆகும்.
   C. நேர்கணிய கட்டமைப்புக்களால் உருவாக்கப்பட்டமையால் நேர்கணிய அரசியல் கோட்பாடுகள் என அறியப்படுகிறது.
   D. உலகில் ஏற்படும் தோற்றப்பாடுகளை விபரிப்பதற்கு கற்றல் கருவியாக பயன்படுத்தப்பட மாட்டாது.
   E. நடத்தை வாதம், ஒப்பீட்டு அரசியல் போன்ற இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன.
   1. ABCD  2. ACDE  3. ABDE  4. ABCE  5.BCDE

3) அரசு என்பது,
   A. நிச்சயிக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்தில் ஒழுங்கமைக்கப்பட்டது.
   B. அரசியல் நிறுவனமாக அரசுக்கு நிறுவனம் கட்டமைப்பு காணப்படவில்லை.
   C. அரசியல் அமைப்பின் மூலமே அரசின் இயல்பு, நிறுவன ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு என்பன தீர்மானிக்கப்படுகின்றன.
   D. இறைமை என்னும் மேலான அதிகாரத்தை கொண்டமைந்துள்ளது.
   E. வரலாற்று மற்றும் சமூக தோற்றப்பாடாக அரசு விபரிக்கப்படுகின்றது.
   1. ABCD  2. ACDE  3. ABDE  4. ABCE  5.BCDE

4) அரசியல் கட்சியினை ஏனைய அரசியல் குழு மற்றும் சமூக இயக்கங்களில் இருந்து வேறுபடுத்தும் பண்புகள்.
   A. கொள்கை ரீதியிலான கருத்தியல் அடையாளங்கள் காணப்படல்.
   B. அங்கத்துவ அட்டைகளைக் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவாகும்.
   C. அரசாங்க கொள்கைக்கு மாறான விடயங்களில் அவதானம் செலுத்தும்.

agaram.lk

D. அரசியல் அதிகாரத்தினை பெற்றுக் கொள்வதினை பிரதான நோக்கமாக கொண்டிருக்கும்.
E. அரசாங்க அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் முயற்சியை மேற்கொள்கிறது.
1. ABCD 2. ACDE 3. ABDE 4. ABCE 5.BCDE

5) அரசியல் அதிகாரத்தின் மையமாக அரசு.
A. அதிகார அரசியலை மாக்கியவல்லி முதலில் பயன்படுத்தி உள்ளார்.
B. மக்ஸ்வெபர் தெளிவான முறையில் அரசினை விளக்குவதற்கு இதனைப் பயன்படுத்தியுள்ளார்.
C. பாராளுமன்றம், நீதிமன்றங்கள் பணியக அமைப்பு போன்ற அதிகாரம் மிக்க நிறுவனங்களைக் கொண்டுள்ளது.
D. சமூகத்தில் கட்டாயப்படுத்தும் அதிகாரத்தினை மரபுசார் சில நிறுவனங்களுக்கும் கொண்டமைந்துள்ளன.
E. அரசின் அதிகாரப் பலமே இறைமை அதிகாரம் என அடையாளப் படுத்தப்படுகின்றது.
1. ABCD 2. ACDE 3. ABDE 4. ABCE 5.BCDE

6) பாசிசவாத அரசமுறை.
A. 20ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தோற்றம் பெற்ற அரசு முறையாகும்.
B. இனத்தின் சிருஷ்டியே அரசு எனக் குறிப்பிடப்படுகின்றது.
C. சர்வவல்லமை பொருந்திய ஸ்தாபனமே அரசு எனக் குறிப்பிடப்படுகிறது.
D. அரசின் படைப்பே ஆட்சியாளன் ஆவான்.
E. நாயகர் வழிபாட்டினையும் ஜனநாயக மறுப்பு வாதத்தினையும் கொண்ட ஆட்சி முறையாகும்.
1. ABCD 2. ACDE 3. ABDE 4. ABCE 5.BCDE

7) பொதுமக்களை அரசாங்கத்துடன் தொடர்புபடுத்தும் வழிமுறைகள்.
A. அரசியல் கட்சிகள்
B. தேர்தல்கள்.
C. ஒப்பங்கோடல்
D. அமுக்க குழுக்கள் மற்றும் பொதுசன அபிப்பிராயம்.
E. அரச சார்பற்ற நிறுவனங்கள்
1. ABCD 2. ACDE 3. ABDE 4. ABCE 5.BCDE

8) நிறைவேற்று அதிகாரத்தினை பிரயோகிப்பதன் படி அரசாங்கங்கள் வகைப்படுத்துவது.
A. சமூக ஜனநாயக அரசாங்கங்கள் என்றாகும்.
B. கலப்பு நிறைவேற்றி அரசாங்கங்கள் என்றாகும்.
C. அணைத்தான்மை அரசாங்கங்கள் என்றாகும்.
D. மந்திரிசபை OR பாராளுமன்ற அரசாங்கங்கள் என்றாகும்.
E. ஜனாதிபதி அரசாங்கங்கள் என்றாகும்.
1. ABCD 2. ACDE 3. ABDE 4. ABCE 5.BCDE

9) முதலாளித்துவப் பொருளாதார முறையின் பிரதான பண்புகள்.
A. சடம்சார் நலனும், இலாப உச்சமும், முயற்சியின்மையினதும் கடும் உழைப்பினதும் பிரதான உந்து சக்திகளாக இருத்தல்.
B. சந்தைகளை இலக்காக கொண்டு பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்.
C. உற்பத்தி மூலதனமானது முழுமையாக தனியாளிடமே இருத்தல்.
D. பொருளாதார வாழ்வு கேள்வி, நிரம்பல் என்ற பொது முறையான சந்தை சக்திகளுக்கேற்ப ஒழுங்கமைத்திருத்தல்.
E. பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு முழுமையாக இல்லாது இருத்தல்.
1. ABCD 2. ACDE 3. ABDE 4. ABCE 5.BCDE

agaram.lk

10) பாராளுமன்ற அரசாங்க முறையின் இன்றியமையாத மூலக் கொள்கைகளாவன.

A. நிறைவேற்றுத்துறை கூட்டுத்தன்மையுடையதாக இருத்தல்.

B. பொதுவாக பாராளுமன்றின் பெரும்பான்மை ஆசனங்களை பெற்ற கட்சியின் உறுப்பினர்களில் இருந்து நிறைவேற்றுத்துறை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படல்.

C. தேர்தலில் நிர்ணயிக்கப்படும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பலத்தின் அடிப்படையில் அமைக்கப்படுதல்.

D. அரசாங்கத்தின் தலைவரான பிரதம மந்திரி அரசின் தலைவர் மற்றும் ஆயுதப்படைகளின் தளபதி ஆகிய பதவிகளை வகித்தல்.

E. அரசாங்கம் பாராளுமன்றின் நம்பிக்கையில் தங்கியிருப்பதால் பாராளுமன்றுக்கு பொறுப்புக்கூறும் அரசாங்கமாக இருத்தல்.

1. ABCD  2. ACDE  3. ABDE  4. ABCE  5.BCDE

❖ **11 – 20 வரையான வினாக்களுக்கு பொருத்தமற்ற கூற்றினை தெரிவு செய்க.**

11) சமதர்மம் என்பது,

1. பட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையில் பொதுவுடமை சமூகத்தை உருவாக்குவதனை இலக்காக கொண்டதாகும்.
2. உற்பத்தி, பங்கீடு, தனியார் உடைமையை முழுமையாக எதிர்கிறது.
3. மாக்சினதும் லெனினதும் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டது.
4. பொது மனிதத்துவத்தின் இருப்பையும் சமூக சமத்துவத்தையும் தூர இலக்காக கொண்டவை.
5. வர்க்க அரசியலோடு நெருங்கிய வகையில் தொடர்புபடுகிறது. (  )

12) ஜனநாயக சோசலிசம் என்பது

1. ஜேர்மனிய அரசியல் கோட்பாட்டாளரான எடுவாட் பேர்னஸ்டைனினால் முன்வைக்கப்பட்ட அரசியல் கருத்தியலின் அடிப்படையில் மலர்ச்சியடைந்ததாகும்.
2. திரிபுவாதம் மலர்ச்சி சோசலிசம் உன்று அழைக்கப்படுகிறது.
3. சமூக மாற்றங்களுக்கு வாக்கு பத்திரத்தினை விட துப்பாக்கி ரவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.
4. அரச மற்றும் தனியார் பொருளாதாரத்துக்கு சார்பான கலப்பு பொருளாதாரம் சார்பான கோட்பாடும்.
5. பொருளாதாரம் ஆனது அரசின் முழுமையான கட்டுப்பாட்டுக்குட்பட வேண்டும் என்ற மாக்சிய கருத்துக்கு முழுஜமயாக எதிரானதாகும். (  )

13) மதசார்பற்ற வாதம் என்பது,

1. மதசார்பின்மை வாதம் என்பது சமயத்தையும் அரசியலையும் ஒன்று கலக்காமலிருப்பதாகும்.
2. ஐரோப்பிய ஞானிகளின் சிந்தனையின் ஒரு பகுதியாகும்.
3. பழைமை தாராண்மைவாதத்தோடும் சமவுடமைவாத சிந்தனையுடனும் தொடர்புபட்டது.
4. சமவுடமைவாத மதசார்பின்மைவாதத்தின் படி மதம் அரசின் அனுமதியின்றி நிலவ முடியும்.
5. இந்திய அரசியமைப்பிலும் அரசியல் முறைமையிலும் அடிப்படையான கோட்பாடாகவும் உள்ளது. (  )

14) தேசிய வாதம் என்பது,

1. அரசியல் கருத்தியலாகவும் அரசியல் மற்றும் சமூக இயக்கமாகவும் காணப்படுகின்றது.
2. இனம் பற்றிய கருத்தாக சுருக்கமாக குறிப்பிடப்படுகின்றது.
3. அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் சக்தியுடையதாகும்.
4. அரச தேசியவாதம் தேசத்தின் மீதான உரிமை மற்றும் பிணைப்பின் மூலம் ஏற்படுகின்றது.
5. சுயநிர்ணய உரிமை தேசியவாதத்திற்கு நேர் எதிரானதாகும். (  )

15) பெண்ணியல் வாத சிந்தனையில் தாக்கம் செலுத்தும் துறைகள்.

1. தாராண்மை பெண்ணியல் வாதம்
2. தீவிர பெண்ணியல் வாதம்
3. பின் சமவுடமைவாத பெண்ணியல் வாதம்
4. பின் நவீன பெண்ணியல் வாதம்
5. பின் காலணித்துவ பெண்ணியல் வாதம் (  )

agaram.lk

16) முரண்பாட்டுத் தீர்வு அணுகுமுறை.
1. சமூக உறவுகள் அணுகுமுறை என்பது சமூகங்களுக்கிடையில் தொடர்பற்றதால் ஏற்படுகின்றது.
2. பிரச்சினை தீர்த்தல் அணுகுமுறை என்பது வேறுபட்ட பொருந்தாத நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது.
3. கலாச்சாரத் தொடர்பாடல் அணுகுமுறை என்பது கலாச்சார மாதிரிகளுக்கு இடையில் காணப்படும் வேற்றுமைகளில் அவதானம் செலுத்துகிறது.
4. மனிதத் தேவைகள் அணுகுமுறை மனிதனுடைய ஆசைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்து பற்றிக் குறிப்பிடுகின்றது.
5. அடையாளத் தேவை அணுகுமுறை என்பது சமூகக் குழுக்களுக்கிடையிலான அடையாளம் அச்சுறுத்தலுக்குள்ளாகுதல் பற்றி கவனம் செலுத்துகின்றது. ( )

17) காலணித்துவ ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை.
1. தரிசு நில, அரசு நில கட்டளைச் சட்டங்களால் தோற்றம் பெற்றது.
2. சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற பாரிய விவசாய பொருளாதார சந்தைமுறை உருவாகியது.
3. தென்னிந்திய தமிழர்கள் கூலித் தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டமை.
4. நவீன உட்கட்டமைப்பு வசதிகள் வளர்ச்சி அடைந்தமை.
5. அரச தலையீட்டுடன் காணப்பட்ட பொருளாதார முறைமை தோற்றம் பெற்றது. ( )

18) காலணித்துவ நிலைமாற்றத்தின் மூலம் ஏற்பட்ட அரசியல் விளைவுகள்.
1. முடியாட்சியுடன் கூடிய ஜனநாயக ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
2. அரசியலமைப்பு சார் ஆட்சி முறை ஏற்பட்டது.
3. இரட்டை நிர்வாக முறை நீக்கப்பட்டு ஒரே வகையான பொதுச்சட்ட முறையின் கீழ் நாடு கொண்டு வரப்பட்டது.
4. பிரதிநிதித்துவ ஜனநாயக முறை வளர்ச்சி.
5. இலங்கை முழுவதும் ஒரே வகையான நீதிமுறை உருவாக்கம். ( )

19) பிரித்தானிய காலணித்துவ ஆட்சியின் கீழ்
1. இராஜகாரிய முறையின் ஒழிப்பின் காரணமாக சாதி முறைமை தளர்வுற்றது.
2. பிற்காலத்தில் தேசிய இயக்கத்துக்குள் தலைமைத்துவத்தை அளித்த ஒரு சுதேச முதலாளித்துவ வர்க்கம் தோன்றியது.
3. திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் அறிமுகத்தினால் தேசிய பொருளாதாரம் சர்வதேச சந்தையோடு இணைந்தது.
4. கச்சேரி முறைமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரதேச நிர்வாக முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டது.
5. அரசாங்கத்தினால் வளமாக்கி மானியம் வழங்கப்பட்டமையால் கிராமிய விவசாயம் அபிவிருத்தியடைந்தது. ( )

20) காலணித்துவ ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றமானது.
1. வினைத்திறனான வரிகளை அறவீட்டு கொள்வதனை நோக்கமாகக் கொண்டமை.
2. தங்குநிலைப் பொருளாதாரம் பொருளாதார முறையினுள் ஒரு பகுதியாக காணப்பட்டது.
3. போட்டித் தன்மை வாய்ந்த சந்தை முறை உருவாகியமை.
4. வளர்ச்சி அடைந்த தொழிலாளர் படையின் தேவை காரணமாக வெளிநாட்டு தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டமை.
5. கண்டி சிங்கள சமூகத்தினரே தேசிய முதலாளித்துவத்தின் ஆரம்ப கர்த்தா ஆவார். ( )

agaram.lk

❖ *21* தொடக்கம் *25* வரையான ஒவ்வொரு வினா தொடர்பாக இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை I இற்கான வழிகாட்டியினுள்ள *1, 2, 3, 4, 5* என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகிறது என்பதை தெரிவு செய்து அவ்விலக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

| இலக்கியம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதோடு முதல் கூற்றை மேலும் பெரிதாக்கிறது |

**அட்டவணை I**

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 21) | அரசு சமூக நிறுவனங்களில் மேலான நிறுவனம் என்பதில் இரு விளக்கங்கள் காணப்படுகின்றன. | அரிஸ்ரோட்டில், பிளேட்டோ ஆகியோர் இவ்விளக்கங்களை முன்வைத்துள்ளனர். (…………..) |
| 22) | சமஷ்டி அரசியல் அமைப்பினுள் சட்ட ரீதியிலான இறைமை அதிகாரம் மத்திய அரசாங்கம் மற்றும் சமஷ்டி முறையில் உருவாக்கப்பட்டிருக்கும். உப பிரிவுகளுக் கிடையில் பங்கிடப்படும். | ஒற்றையாட்சி அரசியல் அமைப்பில் இரண்டு வகையான அரசாங்க முறைகள் காணப்படுகின்றன. (………….) |
| 23) | குடியரசுவாத கருத்தியலில் “சிவில் நல்லொழுக்கம்” பற்றி குறிப்பிடுகின்றது. | அரசியல் ரீதியாக செயற்பாட்டுடன் இருந்து பொது நன்மைக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தால் என இது பொருள் கொள்ளப்படுகின்றது. (………….) |
| 24) | சமாதானத்தை கட்டியெழுப்புதல் நிகழ்ச்சி நிரலில் மீள்கட்டமைத்தல் செயன்முறையும் காணப்படுகின்றது. | மீள் கட்டமைத்தல் செயன்முறை நான்கு மட்டங்களில் இடம் பெறுகிறது. (………….) |
| 25) | இலங்கையின் காலணித்துவ நிலை மாற்றத்தின் போது ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரம் மட்டுமே காணப்பட்டது. | காலணித்துவ நிலை மாற்றத்தின் போது பாராளுமன்ற ஜனநாயக முறை உருவாக்கம் பெற்றது. (………….) |

agaram.lk

## பகுதி B

1) தத்துவார்த்த அணுகுமுறையின் முன்னோடி சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களையும் தருக?

1. …………………………………………………………………………………………….

2. ……………………………………………………………………………………………

2) சமூகத்தில் காணப்படும் நிறுவனங்களை இரண்டாக வகைப்படுத்தலாம். அவை யாவை?

1. …………………………………………………………………………………………….

2. ……………………………………………………………………………………………

3) கிரேக்க நகர அரசு தொடர்பாக இரு பிரதான கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றினை தருக?

1. …………………………………………………………………………………………….

2. …………………………………………………………………………………………….....

4) 1. "நபர்களின் அரசியல் உரிமையை பாதுகாப்பதற்காக அரச அதிகாரமானது மிகவும் குறைந்த அளவில் பயன்படுத்தப்பட வேண்டும்."

2. "சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத பிரசைகள் மற்றும் குடிகள் மீது செலுத்தப்படும் அரசுக்குரிய உயர்வாக அதிகாரம்"

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களினை முன்வைத்தவர்களின் பெயர்களை முறையே தருக.

…………………………………………………………………………………………….....

…………………………………………………………………………………………….....

5) 1. "அரசின் இறுதி நோக்கம் அனைத்து பிரசைகளுக்கும் நலன்புரி மற்றும் நல்வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்"

2. "அரசு பொது விருப்பினை பிரதிபலிப்பதோடு அதன்மூலம் பொது சித்தமே பிரதி நிதித்துவம் செய்யப்படுகின்றது."

முன்வைத்தவர்களின் பெயர்களை முறையே தருக?

…………………………………………………………………………………………….....

…………………………………………………………………………………………….....

6) பின்வரும் நூல்களை எழுதியவர்களின் பெயர்களை முறையே தருக?

1. சட்டத்தின் உயிர் : ………………………………………………………………………

2. எனது போராட்டம் : ………………………………………………………………………

7) தேசிய வாத கருத்தியல் இரண்டு தன்மைகளை கொண்டமைந்துள்ளது. அவற்றினை தருக.

1. ……………………………………………………………………………………………..

2. ……………………………………………………………………………………………..

8) 1. "கல்வி தொழில் வாய்ப்பு மற்றும் சமமான ஊதியம் என்பனவற்றை பெற்றுக் கொள்வதன் மூலம் பெண்களுக்கான அரசியல் மற்றும் சட்ட உரிமைகளை வெற்றி கொள்ளுதல்"

2. "தந்தை வழி தலைமைத்துவத்தை முற்றாக இல்லாததொழித்தல் பெண் விடுதலைக்கு கட்டாயமானது"

மேற்கூறப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில் பெண்ணியல் வாதக்கோட்பாட்டின் இருதுறைகளையும் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………….....

…………………………………………………………………………………………….....

agaram.lk

9) பின்வரும் நூல்களை எழுதியவர்களின் பெயர்களை தருக?

1. முரண்பாட்டின் சமூகவியல். ……………………………………………………………………

2. சமூக ஒப்பந்தம் ……………………………………………………………………

10) இலங்கையில் காலணித்துவ பொருளாதார சமூக நிலை மாற்றல்கள் இரண்டு தளத்தில் இடம்பெற்றன அவை இரண்டையும் தருக?

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

11) “கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சுகளின் படி 1833 இல் தாபிக்கப்பட்ட சட்ட மன்றம் இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது” அவ் இரு உறுப்பினர் வகைகளையும் குறிப்பிட்டு, அவற்றின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

12) 1798 தொடக்கம் 1802 வரை இலங்கையின் கரையோர பகுதியில் 2 வகையான ஆட்சி முறையின் கீழ் காணப்பட்டது. அவை இரண்டினையும் தருக?

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

13) கோல்புறூக் - கமரன் ஆணைக்குழுவின் இரண்டு சிபார்களை இலங்கையில் (1) சுதந்திரமான ஊழியச் சந்தை (2) பாராளுமன்ற அரசாங்க முறைமை என்பவற்றின் அபிவிருத்திக்கபன அடித்தளத்தை இட்டு வைத்தன என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இரண்டு சிபார்சுகளையும் பெயரிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

14) 1. 1924 அரசியல் யாப்புச் சீர்திருத்ததின் சிற்பிகள் யாவர்?

2. 1924 அரசியல் யாப்பு திறம்படச் செயற்படவில்லை என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. 1924 அரசியல் யாப்பின் தோல்விக்கான பிரதான காரணி யாது?

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

15) இலங்கை அரசியல் சீர்திருத்த வரலாற்றில் எந்த இரு யாப்புச் சீர்திருத்தங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையும் சர்வஜன வாக்குரிமையும் அறிமுகம் செய்யப்பட்டது என்பதை முறையே குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

agaram.lk

## பகுதி – II

❖ **பிரிவு I இல் ஒரு வினாவுக்கும் பிரிவு II இல் ஒரு வினாவுக்கும் பிரிவு III இல் ஒரு வினாவுக்கும் விடையளிக்குக.**

### பிரிவு I

1) அரசியலைக் கற்பதற்கான பின்வரும் அணுகுமுறைகளில் இரண்டினை ஆராய்க.
   1. ஒப்பீட்டு அணுகுமுறை (10 புள்ளிகள்)
   2. பெண்ணியல்வாத அணுகுமுறை (10 புள்ளிகள்)
   3. அரசியல் பொருளாதார அணுகுமுறை (10 புள்ளிகள்)

(10 x 2 = 20 புள்ளிகள்)

2) பின்வருவனவற்றில் இரண்டினைப் பரிசீலிக்குக.
   1. அரசியல் கட்சிகள் (10 புள்ளிகள்)
   2. அமுக்க குழுக்கள் (10 புள்ளிகள்)
   3. பின்காலணித்துவ அரசு (10 புள்ளிகள்)
   4. நவ தாராண்மைவாத அரசு (10 புள்ளிகள்)

(10 x 2 = 20 புள்ளிகள்)

### பிரிவு II

3) காலணித்துவ நிலை மாற்றத்தினால் இலங்கையின் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை பரிசீலிக்குக.
   1. சமூகப்பொருளாதாரம்.
   2. அரசியல் (20 புள்ளிகள்)

4) டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் பின்வருவனவற்றில் இரண்டினை ஆராய்க.
   1. அரசுக் கழகம். (10 புள்ளிகள்)
   2. நிறைவேற்றுக்குழு முறைமை. (10 புள்ளிகள்)
   3. தேசாதிபதி (10 புள்ளிகள்)

(10 x 2 = 20 புள்ளிகள்)

agaram.lk

### பிரிவு III

5) பின்வருவனவற்றில் இரண்டினை விளக்குக.
   1. முரண்பாட்டின் அரசியல் வகைப்படுத்தல். (10 புள்ளிகள்)
   2. முரண்பாட்டு தீர்வுக்கான அணுகுமுறைகள் (10 புள்ளிகள்)
   3. முரண்பாட்டு தீர்வு ஊடகங்கள். (10 புள்ளிகள்)

(10 x 2 = 20 புள்ளிகள்)

6) முரண்பாடு என்பதனை வரைவிலக்கணப்படுத்தி முரண்பாட்டு வாழ்க்கை சக்கரத்தினை விவரிக்குக. (20 புள்ளிகள்)